**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை** 173 BNSS

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213032

1. District / மாவட்டம் : கிருஷ்ணகிரி PS / காவல்நிலையம் : ஊ.த.த.பிரிவு Year / ஆண்டு : 2024 FIR No. / மு.த.அ. எண் : 06/AC/2024 Date / நாள் : 26.09.2024

2. (i) Act சட்டம் : ஊழல் தடுப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள் : 7(a)

(ii) Act சட்டம் : திருத்தப்பட்ட சட்டம் 2018 Sections பிரிவுகள் :

(iii) Act சட்டம் : Sections பிரிவுகள் :

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from / நாள் முதல் : Date to / நாள் வரை : 21.09.2024, பிற்பகல் 24.09.2024, 1500 மணி

Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : Time to / நேரம் வரை :

(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 26.09.2024 Time / நேரம் : 0800 மணி

(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : — Time / நேரம் : 0845 மணி

4. Type of Information : Written/ Oral / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 70 கி.மீ. தென் மேற்கு

Beat Number / முறைக் காவல் எண் : — (b) Address / முகவரி : தேன்கனிக்கோட்டை, வட்டாட்சியர் அலுவலகம் முன்பு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : — District / மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : V.வெங்கடேசன் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : V.வெங்கடப்பா

(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 39 (d) Nationality / நாட்டினம் : இந்தியன் (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —

Date of Issue / வழங்கப்பட்ட நாள் : — Place of Issue / வழங்கப்பட்ட இடம் : —

(f) Occupation / தொழில் : விவசாயம் (g) Address / முகவரி : 5/35, பெரிய புதுக்கோட்டை கிராமம், சந்தனப் பள்ளி அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மாதேஷ், கிராம நிர்வாக அலுவலர், சந்தனப்பள்ளி கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / கைவிடப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

—

10 Total value of properties stolen / involved
களவுபட்ட / கைவிடப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required).
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள் தனில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [illegible] 26.9.24. [signature] 26/09/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.09.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at. 1100hrs.

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible] பிரிவு,
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 26.09.2024 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், சந்தனப்பள்ளி அஞ்சல், பெரியபூதுக்கோட்டையை சேர்ந்த, வெங்கடப்பா மகன் திரு.V.வெங்கடேசன் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் V.வெங்கடேசன், த/பெ வெங்கடப்பா, 5/35, பெரியபூதுக்கோட்டை கிராமம், சந்தனப்பள்ளி போஸ்ட், தேன்கனிக்கோட்டை தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் +2 வரை படித்துள்ளேன். நான் எலக்டிரிசியனாக வேலை செய்து வந்தேன். தற்போது சந்தனப்பள்ளி கிராம ஊராட்சி 2வது வார்டு கவுன்சிலராக இருக்கிறேன். மேலும், எனக்கு சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனது வார்டு சம்பந்தமான வேலைகளுக்காக அரசு அலுவலகங்களுக்கு நான் அடிக்கடி செல்வது வழக்கம். எனவே, எங்கள் ஊரில் உள்ள எனது சொந்தகாரர்கள் மற்றும் பொதுமக்களின் அரசாங்க அலுவலகம் தொடர்பான வேலைகளுக்கு சம்மந்தப்பட்டவர்களிடம் மனு பெற்று, நான் முன்னின்று செய்து கொடுப்பேன். எனது 2வது வார்டுக்கு உட்பட்ட பெரியபூதுக்கோட்டை கிராமத்தில் கழிவுநீர் கால்வாய் அமைத்திட, அந்த இடத்தில் தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் நிலத்தினை கால்வாய் அமைக்க ஏதுவாக அளந்துகாட்ட வேண்டியும், சின்னத்திக்கோட்டை கிராமத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்க அளவீடு செய்துதர கோரியும் கடந்த 14.06.2024 ஆம் தேதியன்று தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தியில் மனு கொடுத்திருந்தேன். மேலும், எனது மச்சான் ராஜேந்திரன் பெரியபூதுக்கோட்டையில் சர்வே எண் 1144/1B மற்றும் 1144/3B ஆகியவற்றில் சுமார் 80 சென்ட் நிலத்தினை 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம்

22 ஆம் தேதி தேன்கனிக்கோட்டையை சேர்ந்த நஞ்சப்பன் மகன் மணி என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அந்த நிலத்திற்கான பட்டா எண்.11341-ற்கு உரிய சிட்டாவில் மணி என்பவரின் பெயர் நீக்கப்படாமல் கூட்டாக உள்ளதை, நீக்கிதருமாறு எனது மச்சான் என்னிடம் கூறினார். அவர் ஒசூரில் பைப் வியாபாரம் செய்துகொண்டு, அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவதால் வருவாய்துறை அலுவலர்களை நேரில் சந்தித்து அவரது வேலையை முடிக்க அவரால் முடியவில்லை. எனவே, அவர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கினங்க அவர் சார்பாக நானே மேற்சொன்ன சிட்டாவில் மணி என்பவரின் பெயரை நீக்கம் செய்து தரக்கோரி மனு ஒன்றினை தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மனு பெட்டியில் கடந்த மே அல்லது ஜுன் மாதத்தில் ஒரு நாள் போட்டேன். எனக்கு குறிப்பாக அந்த தேதி ஞாபகமில்லை. கடந்த 21.09.2024 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகலில் தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நான் வேறு வேலையாக சென்றபோது அந்த அலுவலகத்திற்கு வெளியே நின்றிருந்த சந்தனப்பள்ளி VAO திரு.மாதேஸிடம் எனது வார்டு சம்மந்தமான மனு மற்றும் எனது மச்சான் ராஜேந்திரன் அவர்களது சிட்டா சம்மந்தமான மனு ஆகியவற்றை பற்றி கேட்டபோது, வார்டு சம்மந்தமான நிலம் அளக்கும் வேலைகளை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்றும், உங்க மச்சான் சிட்டா பெயர் நீக்கம் செய்யும் வேலைக்கு கொஞ்சம் பணம் செலவாகும் என்றும் அது எவ்வளவு பணம் என்பது குறித்து பிறகு சொல்வதாகவும் என்னிடம் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன்பிறகு, கடந்த 24.09.2024 ஆம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில், தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் ஆலுவலகத்திற்கு நான் வேலையாக சென்றபோது அந்த அலுவலகத்திற்கு எதிரில் இருந்த G-TECH என்ற மக்கள் கணினி மையத்தில் சந்தனப்பள்ளி VAO திரு.மாதேஸ் இருந்தார். அவரிடம் சென்று எனது மச்சான் ராஜேந்திரனின் சிட்டா பெயர் நீக்கம் குறித்து கேட்டபோது, அவர் தனக்கு ரூ.5,000/- தனியாக தரவேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் எனது மச்சான் வெளியூரில் இருக்கிறார் என்றும் நான் அவரிடம் கேட்டுதான் சொல்லமுடியும் என்றும்,

அந்த பணத்தில் சிறிது குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டபோது, அப்படின்னா ஒரு ஆயிரம் ரூபாய் குறைச்சிட்டு, நாலாயிரம் ரூபாய் கொடுத்தால் வேலையை முடித்து தருவதாகவும், அதற்கு குறைவாக செய்யமுடியாது என்றும், பணத்தை கொடுத்தால் சீக்கிரம் வேலையை முடித்து தர ஏற்பாடு செய்கிறேன் என்றும், அதனால் அந்த பணத்துடன் தன்னை எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்குமாறும் சொன்னார். இது சம்மந்தமாக எனது மச்சான் ராஜேந்திரனை ஒசூரில் உள்ள அரவது வீட்டில் 25.09.2024 தேதி இரவு நேரில் சந்தித்து VAO திரு.மாதேஸ் ரூ.4,000/- லஞ்சமாக பணம் கேட்கும் விவரத்தை பற்றி சொன்னேன். அதற்கு அவர் VAO -விற்கு பணம் எதுவும் லஞ்சமாக கொடுக்க தேவையில்லை என்றும், நீங்கள் கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுங்கள் என்று என்னிடம் சொன்னார். எனக்கும் VAO திரு.மாதேஸ் அவர்களுக்கு அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/- கொடுத்து எனது மச்சானின் வேலையை முடிக்க விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.4,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட சந்தனப்பள்ளி VAO திரு.மாதேஸ் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) V.வெங்கடேசன் 26.9.2024.

Sir, received a computer typed complaint on 26.09.2024 at 08.00 hrs and a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Krishnagiri V&AC, Cr.No.6/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by PC amendment Act 2018 was registered today 26.09.2024 at 08.45 hrs against the accused Tr.Madesh, VAO Sandanapalli Village. The original FIR along with complaint is sent to the Hon'ble court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and copies are sent to the officers concerned.

26/9/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை
கிருஷ்ணகிரி.